# சார்பு நீதிமன்றம், அவிநாசி.

**முன்னிலை : திரு. C. செந்தில்குமார், B.Com., B.L.,**
**சார்பு நீதிபதி,**
**அவிநாசி.**

2025–ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 28–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.327/2023**
**in**
**CNR No.TNTI16-000861-2023**

P.சின்னப்பன் ... வாதி

**..எதிர்..**

R.திருமலைச்சாமி ... பிரதிவாதி

இவ்வழக்கானது என் முன்பு 24.02.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.A.ஜெகதீஷ்,** அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் அழைப்பாணை அனுப்பப்பட்டு, சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதி ஆஜராகாத நிலையில் வாதி தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், சாட்சியம் மற்றும் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள்வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து வந்த நிலையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது இந்த வழக்குத் தொகையாக ரூ.2,26,000/ஐ பிரதிவாதியிடமிருந்து வசூலிக்க வேண்டி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதி வழக்குரையின் சுருக்கம் :-</u>

இவ்வழக்கின் பிரதிவாதி அவரது அவசர குடும்ப செலவுகளுக்காகவும், இதர செலவுக்களுக்காவும் வாதியிடம் கடந்த 01.05.2022-ம் தேதியில் ரூ.2,00,000/-ஐ கடனாக கேட்டதன் பேரில் வாதியால் பிரதிவாதிக்கு ரூ.2,00,000/- கடன் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த கடன் தொகைக்கு ஆதரவாக பிரதிவாதி வாதி பெயருக்கு ஒரு கடனுறுதி சீட்டு எழுதி கையொப்பம் செய்து வாதிக்கு கொடுத்துள்ளார். ஆனால், பிரதிவாதி மேற்படி தாவா கடனுறுதி சீட்டிற்கான அசலோ, வட்டித் தொகையையோ வாதிக்கு கொடுக்கவில்லை. இந்த நிலையில் வாதி பலமுறை கேட்ட போதும், பிரதிவாதி கடன் தொகையை செலுத்தாமல் வீண் காலம் கடத்தி வந்துள்ளார். எனவே, தாவா கடன் தொகையான ரூ.2,26,000/-ஐ பிரதிவாதியிடமிருந்து வசூல் செய்ய வேண்டி இந்த தாவாவை வாதியால் தாக்கல் செய்ய நேரிட்டது. அதனால், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளார்.

3. இந்நிலையில் இவ்வழக்கில் பிரதிவாதிக்கு இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டு, சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதி முன்னிலையாகாத நிலையில் பிரதிவாதி தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

4. இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி சென்னியப்பன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிகளும் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப் படவில்லை.

5. **<u>பிரச்சனை:</u>** வாதி இந்த தாவாவில் கோரியபடி வாதிக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதா இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**<u>6. தீர்வு:-</u>**

6.1 இவ்வழக்கானது பிரதிவாதி வாதியிடம் கடந்த 01.05.2022-ம் தேதியன்று அவரது அவசர குடும்ப செலவுகளுக்காகவும், இதர செலவுகளுக்காகவும் வேண்டி ரூ.2,00,000/-ஐ வாதியிடம் கடனாக கேட்டு பெற்றுள்ளார். அதற்கு ஈடாக பிரதிவாதி கடன் தொகைக்கு ஆதரவாக 01.05.2022-ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டை வாதிக்கு எழுதி கொடுத்துள்ளார். மேற்படி தாவா கடனுறுதி சீட்டிற்கான அசலோ, வட்டித் தொகைகளை பிரதிவாதியிடம், வாதி பலமுறை கேட்ட போதும், பிரதிவாதி தொகை செலுத்தாமல் வீண் காலம் கடத்தி வந்துள்ளார். அதனால் வாதி, தாவா தொகையான ரூ.2,26,000/-மும், அதற்குண்டான வட்டியையும், செலவுத்தொகையையும் செலுத்த வேண்டி பிரதிவாதிக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும் வாதியால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2 வாதி தனது வழக்கை நிரூபணம் செய்யும் வகையில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பிரதிவாதி வாதி கடனாக ரூ.2,00,000/-ஐ பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக 01.05.2022-ம் தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த கடனுறுதிச் சீட்டு வா.சா.ஆ.1 ஆகவும், 09.05.2023-ம் தேதியிட்ட அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சலக ரசீது வா.சா.ஆ.2 ஆகவும், 12.05.2023-ம் தேதியிட்ட அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வா.சா.1 சாட்சியத்திலிருந்தும், வாதி தரப்பு சான்றாவணத்திலிருந்து கடந்த 01.05.2022-ம் தேதியன்று எழுதிக் கொடுத்த கடனுறுதிச் சீட்டின் மூலம் பிரதிவாதி வாதியிடம் கடன் பெற்றுள்ளார் என்பதும்,

அதற்கு ஆதரவாக தான் பிரதிவாதி வாதிக்கு கடந்த 01.05.2022–ம் தேதியிட்ட தாவா கடனுறுதி சீட்டு வா.சா.ஆ.1 ஐ எழுதி கொடுத்துள்ளார் என்பதும் ஊர்ஜிதமாகிறது.

6.3 இந்நிலையில், வாதியின் வழக்கு பொய்யானது என்று சொல்லும் வண்ணம் இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட தாவா சம்மனை பிரதிவாதி பெற்றுக் கொண்டுள்ள போதிலும், பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி இவ்வழக்கினை ஆட்சேபித்து எதிர்வழக்காட முன்வரவில்லை. அதனால் இந்நீதிமன்றமானது பிரதிவாதியை கடந்த 09.11.2023–ம் தேதியில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பிரதிவாதி வாதியிடம் கடந்த 01.05.2022–ம் தேதியில் கடனாக ரூ.2,00,000/–ஐ பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக வாதிக்கு 01.05.2022–ம் தேதியிட்ட கடனுறுதிச் சீட்டு வா.சா.ஆ.1–ஐ எழுதிக்கொடுத்து கடன் பெற்றுக்கொண்டுள்ள நிலையில், பிரதிவாதி தான் வாங்கிய கடனையும், வட்டியையும் திருப்பி செலுத்தாத நிலையிலும், இவ்வழக்கு உரிய காலக்கெடுவிற்குள் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. அதனால் வாதி தாவாவில் கோரியபடி தாவா தொகைக்கு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** வாதியின் தாவா அனுமதிக்கப்பட்டு, தாவா தொகையான ரூ.2,26,000/–ம், அசல் தொகை ரூ.2,00,000/–க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரையில் 9% வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரையில் 6% வட்டியும் சேர்த்து பிரதிவாதி 2 மாத கால அவகாசத்திற்குள் வாதிக்கு செலுத்தப்பட வேண்டும் என்று செலவுத்தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 28.02.2025 அன்று அவையறிய பகரப்பட்டது.

ஓம்/–C.செந்தில்குமார்,
சார்பு நீதிபதி,
அவிநாசி.

**<u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:</u>**

வா.சா.1 – P.சின்னப்பன் (வாதி)

**<u>வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.05.2022 | கடனுறுதிச் சீட்டு | அசல் |
| வா.சா.ஆ.2 | 09.05.2023 | அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது | நகல் |
| வா.சா.ஆ.3 | 12.05.2023 | அஞ்சல் ஒப்புகை ரசீது | அசல் |

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

ஓம்/–C.செந்தில்குமார்,
சார்பு நீதிபதி,
அவிநாசி.

அ.வ.எண்.327/2023
வரைவு/சீரான தீர்ப்புரை
நாள் 28.02.2025